Register No. | | | | | | | | |

**FA5A**

**6575–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

# INDIAN PUBLIC ADMINISTRATION

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the evolution of Public administration as a discipline.

   பொது நிர்வாகம் ஒரு பாடமாக உருவான படிப்படியான வளர்ச்சியை விளக்கவும்.

2. Explain the Bureaucratic theory of organisation.

   அமைப்பு முறையில் அதிகார வர்க்கக் கோட்பாட்டை விளக்குக.

3. Explain the different forms of Public enterprise.

   பல்வேறு வகையான பொது நிறுவனங்களை விளக்குக.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Analyse 73rd and 74th Amendment to the Constitution.

   அரசியலமைப்பின் 73 மற்றும் 74வது அரசமைப்புத் திருத்தங்களை ஆய்வு செய்க.

5. Evaluate the Mahatma Gandhi National Rural Employment Guarantee (MGNREG) Programme.

   மகாத்மா காந்தி தேசீய கிராம வேலை வாய்ப்பு உத்திரவாத செயல் திட்டத்தை ஆய்வு செய்க.

6. Explain the merits and demerits of Independant regulatory commissions.

   தன்னிச்சை கட்டுப்பாட்டு ஆணையங்களின் நன்மை மற்றும் தீமைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Budget.

வரவு செலவுத் திட்டம்.

(b) Departments.

துறைகள்.

(c) Informal Organisation.

முறையற்ற அமைப்பு.

(d) Scientific Management.

அறிவியல் சார்ந்த நிர்வாகம்.

(e) Election Commission.

தேர்தல் ஆணையம்.

(f) Organisation and Method.

அமைப்பு முறையும் வழிமுறையும்.

(g) TRAI.

டிராய்.

PART D — (6 × 2 = 12 marks)

8. Answer SIX of the following briefly :

பின்வருவனவற்றுள் ஆறனுக்கு சுருக்கமாக விடையளிக்கவும் :

(a) Lokpal.

லோக்பால்.

(b) Participative Management.

பங்கேற்பு மேலாண்மை.

(c) Urwick Lyndall.

அர்விக் லிண்டால்.

(d) Hierarchy.

படிநிலை.

(e) Human Rights.

மனித உரிமைகள்.

(f) Field Administration.

கள நிர்வாகம்.

(g) Decision Making.

முடிவெடுக்கும் செயல்.

(h) Integral View.

உள்ளடக்கிய பார்வை.

Register No. [ | | | | | | | | ]

**FA5B**

**6576–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

JURISPRUDENCE

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ...LLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The definition of law as a command of the sovereign is incomplete and inadequate" – Comment.

   சட்டம் என்பதன் வரையரை 'இறையாண்மை வாய்ந்த ஒரு நபரின் கட்டளை' என்பது முழுமையானதாகவும் போதுமானதாகவும் இல்லை என்பதை குறிப்பிடுக.

2. Define the concept of legal right and explain how far rights and duties are Correlatives.

   சட்ட உரிமை என்ற கருத்துப்படிவத்தை வரையறுத்து உரிமைகளும் கடமைகளும் எந்த அளவிற்கு ஒப்புமை கொண்டவை என்பதை விளக்குக.

3. Discuss the legal status of an animal, unborn child and a deceased human being.

   ஒரு விலங்கு, பிறவா குழந்தை மற்றும் இறந்து விட்ட மனிதன் இவைகளின் சட்டநிலையினை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Jurisprudence is a normative science" – Elucidate.

   "சட்டவியல் என்பது ஒரு நெறிமுறை அறிவியல்" - விளக்குக.

5. Explain the nature of 'title'. How is possession and ownership acquired?

உரிமை மூலத்தின் தன்மையை விளக்குக. உடைமை மற்றும் சொத்துரிமை பெறும் வழிகள் யாவை?

6. Discuss the various concepts of Natural Law.

இயற்கைச் சட்டம் பற்றிய பல்வேறு கருத்தியல்களை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Legal person

சட்ட நபர்

(b) Obligation

கடப்பாடு

(c) Precedents

முன்தீர்ப்பு நெறி

(d) Reformative theory

சீர்திருத்தக் கோட்பாடு

(e) Custom

வழக்காறு

(f) Corrective justice

சீர்திருத்த நீதி

(g) Procedural Law

நடைமுறைச் சட்டம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A boy found a purse on the road near a shop and took it to the shopkeeper to know if someone was asking for the lost purse. The shopkeeper said that no one was asking for the purse. Further the shopkeeper refused to return the purse to the boy saying that the boy was not the owner of the purse. – Decide.

ஒரு சிறுவன் ஒரு கடைக்கு அருகில் உள்ள சாலையில் ஒரு பணப்பையைக் கண்டார். தொலைந்து போன பணப்பையை யாராவது கேட்கிறார்களா என்பதை அறிய அருகில் உள்ள கடைக்காரரிடம் எடுத்துச் செல்கிறான். பணப்பையை யாரும் தேடிவரவில்லை என்று கடைக்காரர் சொல்கிறார். மேலும், அந்தச் சிறுவன் அந்தப் பணப்பைக்கு உரிமையாளர் இல்லை என்று கூறி அதை அவனிடம் திருப்பி கொடுக்க கடைக்காரர் மறுத்துவிட்டார். - முடிவுசெய்க.

9. "X" wants to write a "will" to transfer his property to his pet animal, a dog. Is this possible?

"X" தன் செல்லப்பிராணி நாய்க்கு தன் சொத்துகளை மாற்றம் செய்ய விருப்பாவண வாயிலாக உயில் சாசனம் எழுத விரும்புகிறார். இது செல்லத் தகுந்ததா?

10. There was a leakage of electricity through a damaged wire from the defendant's premises which damaged sensible apparatus lying on the plaintiff's land. Can the defendant be held liable? – Decide.

பிரதிவாதியின் மனையில் இருந்த சேதமான மின் கம்பியிலிருந்து மின்சாரம் கசிந்ததால் வாதியின் நிலத்தில் இருந்த உணரும் ஆய்கருவி சேதமடைந்தது. இதற்காக பிரதிவாதியை பொறுப்படைவுக்கு உள்ளாக்க முடியுமா? முடிவுசெய்க.

---

Register No. | | | | | | | | |

**FA5C**

6577–25

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

CONSTITUTIONAL LAW – I

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the Constitutional position of Right to equality of opportunity in pubic employment in India.

   இந்தியாவில் பொது வேலை வாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் அரசமைப்புச் சட்ட நிலையினை விளக்குக.

2. "Right to Freedom of Speech and Expression is not without restriction". Examine the statement with relevant cases.

   "பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் கட்டுப்பாடற்ற ஒன்றல்ல". - இக்கூற்றினை தொடர்புடைய வழக்குகள் கொண்டு ஆராய்க.

3. "The right to enforce fundamental right itself is fundamental right under the Indian Constitution". – Elucidate.

   "இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமையை செயல்படுத்துவதே ஒரு அடிப்படை உரிமையாக உள்ளது". - தெளிவாக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What do you understand by 'Law' and 'Law in force' under Article 13? Answer with supporting case laws.

   அரசமைப்புச் சட்டத்தின் 13-வது உறுப்பின் கீழ் 'சட்டம்' மற்றும் 'நடைமுறையிலுள்ள சட்டம்' இது குறித்து தாங்கள் புரிந்து கொண்ட கருத்து யாது? தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் பதிலளிக்கவும்.

5. Explain the ways of resolving the Conflict between Fundamental Rights and Directive Principles.

அடிப்படை உரிமைகளுக்கும், வழிகாட்டும் நெறிமுறைகளுக்கும் இடையே உள்ள முரண்பாட்டினை தீர்ப்பதற்கான வழிகளை விளக்குக.

6. Explain the Constitutional provisions relating to the formation of New States by citing recent examples.

சமீபத்திய உதாரணங்களை சுட்டிக்காட்டி புதிய மாநிலங்களை ஏற்படுத்துவதற்கான அரசியல் சட்ட விதிமுறைகளை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Definition of the term 'State'

அரசு என்ற சொல்லின் வரையறை

(b) National Anthem Case

தேசீய கீத வழக்கு

(c) Doctrine of Severability

பிரிக்கத்தக்க கோட்பாடு

(d) Need for Fundamental Duties

அடிப்படைக் கடமைகளுக்கான தேவை

(e) Unni Krishnan vs State of Andhra Pradesh

உன்னிக்கிருஷ்ணன் (எதிர்) ஆந்திர மாநிலம்

(f) Restrictions to freedoms under Article 19

உறுப்பு 19-ல் குறிப்பிடப்பட்டுள்ள சுதந்திரங்களுக்கான கட்டுப்பாடுகள்

(g) Writ of Quo Warranto

தகுதி வினவும் நீதிப்பேராணை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. An Airport Authority dismissed an employee after conducting a departmental enquiry. The employee challenges his dismissal by way of writ petition. Will a writ lie against an Airport authority?

ஒரு வானூர்தி முனைவ அமைவம் ஒரு ஊழியரின் மீது துறை நடவடிக்கை எடுத்து பணிநீக்கம் செய்தது. அந்த ஊழியர் நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்து பணி நீக்கத்தை இரத்து செய்யக் கோருகிறார். வானூர்தி முனைவ அமைவத்திற்கு எதிராக நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்ய முடியுமா?

9. The request of 'X' who is under preventive detention to make his representation before the advisory board on preventive detention by a legal practitioner of his choice was rejected. 'X' contends that it is violative of his fundamental rights. Decide.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 'X' என்பவர் தடுப்புக்காவல் அறிவுரை வாரியத்தின் முன் தான் விரும்பும் வழக்குரைஞரால் தனது தடுப்புக் காவலுக்கு எதிரான முறைவேண்டுதலை எடுத்துரைக்கக் கோருகிறார். இக்கோரிக்கை மறுக்கப்பட்டபோது அது தனது அடிப்படை உரிமையை பாதிப்பதாக வாதிடுகிறார். முடிவு செய்க.

10. Srividya was not admitted into the educational institution for the reason that she could not pay Capitation fee. Is the action of the management compelling her to pay capitation fee for admission valid? Decide.

கல்வி நிறுவனத்தில் ஸ்ரீவித்யா என்பவருக்கு கட்டாய நன்கொடைக் கட்டணம் கட்ட இயலவில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்பட்டது. நிர்வாகம் அனுமதிக்காக கட்டாய கட்டணம் செலுத்த அவரை கட்டாயப்படுத்துவது செல்லத்தக்கதா? தீர்மானிக்க.

Register No. | | | | | | | | |

**FA5D**

6578–25

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF PROPERTY

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102 ★

Time : $2\frac{1}{2}$ hours　　　　Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is doctrine of Marshalling? How Marshalling is different from doctrine of contribution?

   வரிசையுரிமை கோட்பாடு என்றால் என்ன? இது எவ்வாறு விகிதப் பொறுப்புக் கோட்பாட்டிலிருந்து வேறுபட்டது?

2. What are the essentials of valid transfer? Discuss.

   உரிமை மாற்றத்தின் முக்கியமான அம்சங்கள் என்ன? விவாதிக்கவும்.

3. Define easement. Discuss different modes of acquisition of easements.

   வசதியுரிமையை வரையறுக்கவும். வசதியுரிமைகள் பெறுவதற்கான பல்வேறு முறைகளைப் பற்றி விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the rights and liabilities of buyer and seller?

   வாங்குபவர் மற்றும் விற்பவரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் என்ன?

5. What is fraudulent transfer? Discuss with case laws.

   மோசடி பரிமாற்றம் என்றால் என்ன? வழக்குகளுடன் விவாதிக்கவும்.

6. How vested interest is different from contingent interest? Discuss.

சேர்ந்தடை உரிமை வருநிகழ்வு சார்ந்த உரிமையிலிருந்து எப்படி வேறுபடுகிறது? விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Notice

அறிவிக்கை

(b) Exchange

பரிமாற்றங்கள்

(c) Doctrine of Holding out

உரிமைப் போலிச் செயல் கோட்பாடு

(d) Tenancy by will and sufferance

விருப்ப முடிவுக் குத்தகை மற்றும் கெடுமுடிந்த குத்தகை

(e) Exception to condition restraining alienation

மாற்றாக்கத்தின் பேரிலான தடைக்கான விதிவிலக்கு.

(f) Bellamy vs Sabine

பெலாமி எதிராக சபைன்

(g) Attestation

சான்றுக் கையொப்பம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' gifted his property to 'B' with a condition that 'B' should not partition the property. B is interested to partition the property and sell to two other people. Advise 'B'.

'B' சொத்தைப் பிரிக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் தன் சொத்தை 'A' என்பவர் 'B'க்கு பரிசாக அளிக்கிறார். 'B' அச்சொத்தைப் பிரித்து மற்ற 2 பேருக்கு விற்க முயல்கிறார். 'B'க்கு ஆலோசனை கூறுக.

9. J sells as property to H through an agreement. The agreement was not registered. J gives possession to H but H failed to pay instalment. Can J claim against H?

'J' ஒரு சொத்தை ஒப்பந்தம் மூலம் 'H'க்கு விற்கிறார். ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை. J, 'H'-க்கு உடைமை வழங்குகிறார், ஆனால் 'H' தவணை செலுத்தத் தவறினார். 'H'க்கு எதிராக தவணை செலுத்துவதை 'J' கோரலாமா?

10. 'K' mortgaged property to 'Y' with a condition that if 'K' failed to pay the loan amount then Y will get absolute interest in the property. But if K paid the loan amount then Y will retransfer the property to K. K mortgaged property on 6/11/2020. K has to pay the amount by 12/10/23. But K failed to pay. Advise Y.

K தனது சொத்தை Y-யிடம் அடைமானம் வைத்தார். K கடன் தொகையைச் செலுத்தத் தவறினால் Y சொத்தின் மீதான முழுமையான உரிமை பெறுவார் என்ற நிபந்தனை வைத்தார். K கடன் தொகையை செலுத்தினால், Y என்பவர் சொத்தை Kக்கு மாற்றியளிப்பார். K அடைமானம் வைத்த சொத்தின் தேதி 6/11/2020. K 12/10/23 க்குள் தொகையைச் செலுத்த வேண்டும். ஆனால் K அந்தத் தொகையைச் செலுத்தத் தவறிவிட்டார். Y க்கு ஆலோசனை கூறவும்.

---

Register No. | | | | | | | | |

**FA5F**

**6579–25**

(For the candidates admitted from 2022 – 2023 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

BHARATIYA SAKSHYA ADHINIYAM, 2023.

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Evidence must be confined to the matters in issue" – Examine the statement with its exceptions under Bharatiya Sakshiya Adhiniyam.

   "தீர்வுக்குரிய நிகழ்மைக்கு மட்டும் சான்றுகள் வழங்கப்பட வேண்டும்" – இக்கூற்றினை விலக்குகளுடன் பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின்படி ஆய்வு செய்க.

2. What is 'Dying declaration'? Explain the conditions under which dying declaration is admissible.

   'மரண வாக்குமூலம்' என்றால் என்ன? எந்தச் சூழ்நிலைகளில் மரண வாக்குமூலங்கள் ஏற்கப்படுகின்றன என்பதை விளக்கவும்.

3. Differentiate 'Primary Evidence' from 'Secondary Evidence'. Under what circumstances secondary evidence is admissible under Bharatiya Sakshiya Adhiniyam?

   முதல் நிலை சாட்சியத்தை சார்நிலை சாட்சியத்தில் இருந்து வேறுபடுத்திக் காட்டுக. எத்தகைய சூழ்நிலைகளில் சார்நிலைசான்று பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் கீழ் ஏற்கப்படும்?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the cases in which the character of a person may be relevant.

   ஒரு நபரின் பண்பு எந்த விதமான வழக்குகளில் தொடர்புடையதாக அமையும் என்பதை விவரிக்க.

5. Who can be a competent witness? Examine the types of evidences.

தகுதிவாய்ந்த சாட்சி என்பவர் யார்? சாட்சியங்களின் வகைகளை விளக்குக.

6. Explain the doctrine of estoppel and distinguish it from res judicata.

முரண்தடை கோட்பாட்டை விளக்கி, அதை முன் தீர்ப்புத் தடையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Expert Evidence

வல்லுநர் சாட்சியம்

(b) Electronic record

மின்னணுப் பதிவு

(c) Proved

நிரூபிக்கப்பட்டது

(d) Latent ambiguity

உட்கிடை பொருள்மயக்கம்

(e) Re-examination

மறு விசாரணை

(f) Public documents

பொது ஆவணங்கள்

(g) Leading questions

விடையமை வினாக்கள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is charged for travelling on a train without a ticket. 'A' alleges he had a ticket. On whom does the burden of proof lie?

பயணச்சீட்டில்லாமல் ரயிலில் பயணம் செய்ததாக 'A' குற்றம் சாட்டப்படுகிறார். தாம் ஒரு பயணச்சீட்டை வைத்திருந்ததாக 'A' கூறுகிறார். இதில் மெய்ப்பிக்கும் சுமை யாரைச் சாரும்?

9. A client says to his advocate – "I am going to commit theft at a jewellery shop tomorrow, for which you have to defend me in the court if I am caught". Is this communication protected from disclosure?

ஒரு கட்சிக்காரர் தன் வழக்கறிஞரிடம் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் – "நான் நாளை நகைக்கடை ஒன்றில் திருடப் போகிறேன். ஒரு வேளை நான் மாட்டிக் கொண்டால் எனக்காக நீங்கள் நீதிமன்றத்தில் வாதாட வேண்டும்". மேற்கண்ட இந்தத் தகவல் பரிமாற்றம் வெளிப்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டதா?

10. The question is whether a horse sold by A to B is sound. A says to B "Go and ask C, C knows all about it". Is C's statement relevant?

'A' என்பவர் 'B' என்பவருக்கு விற்ற குதிரை நல்லநிலையில் உள்ளதா என்ற கேள்வி எழுகிறது. 'B'யிடம் 'A' சொல்கிறார் 'C'ஐக் கேள், அது பற்றி அவருக்கு அனைத்தும் தெரியும் என்று. 'C' யின் வாக்குமூலம் தொடர்புடையதா?

---